# கீதாசார்யன்





ஆசிரியர்

**M. A. வேங்கடகிருஷ்ணன், M. A.**

P. T சுந்தரவரதன்
நிதிக் காப்பாளர்.

N. கணபதி
விளம்பரப் பொறுப்பாளர்



7, தெற்கு மாட வீதி.
திருவல்லிக்கேணி : சென்னை-600005.

ஆண்டுச் சந்தா ரூ 8/ ]

[ விலை 75 காசு

ஸ்ரீ :

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்



"कर्मण्येवाधिकारस्ते मा फलेषु कदाचन।"

தொகுதி 1 | காளயுக்தி௵ | மாசி ௴ | பிப்ரவரி 79 பகுதி 5

பட்டர் : இன்று நாம் விளக்கப்போகும் பாசுரம் நம்மாழ்வாருடைய "என் நீர்மை கண்டிரங்கி" (திருவாய்மொழி 1-4-4) என்ற பாசுரமாகும். எம்பெருமானாகிற நாயகனைப் பிரிந்த நம்மாழ்வாரான நாயகி. சில பறவைகளைத் தூது அனுப்புகிறாள் 'எம்பெருமானோ என்னைப் பிரிந்து வெகு தூரத்திலிருக்கிறான். அவனுடைய பிரிவால் ஏற்பட்ட துக்கத்தை என்னால் ஆற்ற முடியவில்லை. அவனோ ஒன்றும் சொல்லாமல் இருக்கிறான். பறவைகளே! "என் நீர்மை கண்டு இரங்கி இது தகாது என்னாத என் நீல்முகில் வண்ணற்கு என் சொல்லி யான் சொல்லுகேனோ" (என்னுடைய இந்த நிலையைக் கண்டு இது இவளுக்கு ஆற்றமுடியாது என்று வருந்தாத நாயகனுக்கு எதைச் சொல்லி நான் தூதனுப்புவது?)' என்று கூறுகிறார் நம்மாழ்வார்.... என்ன ஆலவாயரே! உம்முடைய முகத்தில் ஏதோ சந்தேகக்குறி தோன்றுகிறதே! என்ன விஷயம்?

ஆலவாயன் : ஆசார்யன் திருவருளால் எனக்கு எல்லாம் எளிதாகிவிட்டபோதிலும் ஒரு சிறு சந்தேகம் இங்கு ஏற்படுகிறது. அதை தேவரீர்தான் போக்கவேணும் நாயகனோ நாயகிக்கு வெகு தூரத்தில் இருக்கிறான் நாயகி படும்

துக்கத்தை அவனால் நேரில் பார்க்க முடியாது. எனவே நாயகி பட்ட துயரத்தை அவன் பிறர்வாயிலாகக் கேட்டே அறிந்திருக்க வேண்டும். எனவே ''என் நீர்மை கேட்டிரங்கி'' என்று நாயகி சொல்லாமே தவிர 'கண்டிரங்கி' என்று சொல்வது எப்படிப் பொருந்தும்.

பட்டர் : நன்று ஆலவாயரே ! நன்று. இப்போது நாயகன் நாயகி படும் துயரத்தைக் காணமுடியவில்லையானாலும் முன்பு நாயகன்கூட இருந்தபோது நாயகியின் துக்கத்தைக் கண்டிருப்பானல்லவா ? அப்படிப்பார்த்து வைத்திருந்தும் இப்போது அந்துயரத்துக்கு நாயகன் இரங்கவில்லையே என்று வருத்தப் படுகிறாள்.

ஆலவாயன் : பட்டரே இது எப்படிப் பொருந்தும் ? இப்போது நாயகி வருந்துவது நாயகனின் பிரிவிற்காக இதை எப்படி நாயகன் முன்பே அறியமுடியும்? நாயகிபடும் துன்பத்தை நாயகன் கூட இருந்தாலன்றோ காணமுடியும் அவன் கூட இருந்தால் இவள் பிரிவிற்காக ஏன் வருந்தப் போகிறாள் ? முன்னுக்குப்பின் முரணாய் விடுமே !

பட்டர் : அப்படியல்ல ஆலவாயரே ! நாயகன் கூடவிருக்கும்போதே பிரிவால் வருந்துவதற்கு இடம் உண்டு. நாயகன் நாயகியை அணைத்துக் கொள்கிறான். மீண்டும் இறுகத் தழுவுவதற்காக சற்றுத் தளர்த்துகிறான். உடனே அந்த ஒரு நொடிப் பொழுதின் பிரிவால நாயகியின் உடல், பிரிவால் வருந்தி பசலை நிறம் பெற்றுவிடும் இதைத்தான் வள்ளுவரும் "புல்லிக்கிடந்தேன் புடைபெயர்ந்தேன் அவ்வளவில் அள்ளிக் கொள்வதற்றே பசப்பு'' (குறள் 1187) என்று கூறுகிறார். மேலும் குறுந்தொகையில்''ஊருண்கேணி உண்டுறைத்தொக்க பாசியற்றே பசலை, காதலர் தொடுவுழித்தொடுவுழி நீங்கி விடு விடுவுழிப் பரத்தலானே'' (கிணற்றினுள்ளே படர்ந்து கிடக்கும்

பாசியைப் போன்றது பசலை நிறம். தண்ணீரில் கைவைத்தால் கைபட்ட இடங்களில் பாசி நீங்கும் ; கையை எடுத்துவிட்டால் அவ்விடமெல்லாம் மீண்டும் பாசி மூடிக் கொள்ளும் அது போல காதலனுடைய கைபடுமிடங்களில் பசலை நீங்கும் அணைத்தகை நெகிழ்ந்தவாறே அப்பசலை நிறம் படரும்) என்ற விடமும் கேள்விப்பட்டிருப்பீரே ! எனவே நாயகன் கூடவிருக் கும்போதே, அவனுடைய ஒரு நொடிப்பொழுது பிரிவையும் சகியாத நாயகியின் நிலையைக் கண்டு வைத்தும், இப்போது வெகுதூரத்திலிருந்து கொண்டு இரக்கமற்ற அரக்கனாக இருக் கும் நாயகனுக்கு நான் என்ன சொல்வது என்று நாயகி வருந்து கிறாள்.

ஆலவாயன் : ஆகா ! என்ன அருமையான விளக்கம். கீதாசார்யன் அருளிய மயர்வற மதிநலத்தாலன்றோ இவ் வர்த்தங்கள் தேவரீருக்குக் கிடைக்கின்றன. நானும் கீதாசார்யனின் திருவருளால் ஓரளவு புரிந்து கொண்டாலும் சில சிறிய சந்தேகங்களைக் கேட்காமல் இருக்க முடியவில்லை. மன்னித்தருள வேணும்.

பட்டர் : அதனாலென்ன ! அறிவாளிகளுக்குத்தான் சந் தேகங்கள் எழும். சந்தேகங்களும் கூடத் தோன்றாதவர்கள் ஊன்றிக்கவனிப்பதில்லை என்றுதானே பொருள். எல்லோரும் எல்லாவற்றையும் எளிதில் புரிந்து கொள்ளும் சக்தியைப் பெறவேணும் என்று கீதாசார்யனை வேண்டுவோம்.

# திருநாராயணபுரத்தைப் பற்றி...

**"ஸம்பத்குமாரன்"**

● திருநாராயணபுரம் — திருநாராயணன் எழுந்தருளி இருக்கும் இடம் என்று பொருள். இது ஸ்ரீராமாநுஜர் இட்ட பெயராகும்.

● இத்தலம் கர்நாடகத்தின் தலைநகரான பெங்களூரி லிருந்து 80 மைல் தூரத்திலும், மைசூரிலிருந்து 32 மைல் தூரத்திலும் (இடையில்) உள்ளது. இடையில் உள்ள மாண்டயா அல்லது பாண்டவபுரம் ரயில்வேஸ்டேஷனிலிருந்தும் போகலாம்.

● ஆழ்வார் பாடல் பெற்ற 108 தலங்களுள் இது சேரா விட்டாலும் ஸ்ரீராமாநுஜரால் அபிமானிக்கப்பட்டதால் இத்தலம் திவ்யதேசமாயிற்று.

● இத்திருநாராயணபுரத்திற்கு யாதாவாத்ரி, யதுகிரி, யதிசைலம், நாராயணாத்ரி, மேல்கோட்டை என்ற பல பெயர்களுண்டு.

● நாரஸிம்ம, வராஹ, வீதாரண்ய, தார்க்ஷ்ய, நயன, பஞ்சபாகவதத்ஞான அர்வத்தம் என்கிற ஸப்த க்ஷேத்ரங்கள் உள்ளன. இவற்றுள் பலபேச எழுந்தருளியிருக்கும் அழகிய சிங்கர் புராணப்ரஸித்தி பெற்றவராவர்.

● வேதபுஷ்கரிணி, தனுஷ்கோடி, யாதவதீர்த்தம், தர்ப்பதீர்த்தம், பலாச தீர்த்தம், பத்மதீர்த்தம், மைத்ரேயதீர்த் தம், நாராயணதீர்த்தம் என்கிற அஷ்ட தீர்த்தங்களால் திரு நாராயணபுரம் சூழப்பட்டிருக்கிறது.

● ஆதிகாலத்தில் ப்ரம்மா திருநாராயணனை ஆராதித்து வந்தார். பின்னர் ஸனத்குமாரருக்கு அவரைக் கொடுத்து

விட்டார் அவர்நாராயணாத்ரியில் திருநாராயணரை ப்ரதிஷ்டை செய்து ஆராதித்து வந்தார்.

● ஸ்ரீமந் நாராயணன் ப்ரம்மாவிற்காக திருநாராயணரைப் போன்ற வேறொரு திருமேனியை வரவழைத்துக் கொடுத்தார். அவரும் வெகுகாலம் ஆராதித்து வந்தார். ஸ்ரீரங்கநாதனை விபீஷணன் பெற்றுப் போனவுடன் ப்ரம்மா தம் பெருமானை ஸ்ரீராமபிரானார்க்கு தந்தருள ஸ்ரீராமபிரானும் ப்ரியமாக அவ்வெம்பெருமானை ஆராதித்து வந்தார். அதனால் அவ்வெம் பெருமான் **ராமப்ரியர்** ஆனார்.

● ஸ்ரீராமபிரானுக்குப் பிறகு அவருடைய புத்திரனான குசன் ஆராதித்தான். அவனுடைய மகள் கனகமாலிகை யதுசேகரன் என்ற யதுவம்சத்தரசனை மணந்தபோது ஸ்த்ரீதனமாகக் கொடுத்துவிட, வழிவழியாக யதுவம்சத்தவனான ஸ்ரீகிருஷ்ணனிடம் வந்து சேர்ந்தான் ராமப்ரியன்.

● ஒரு ஸமயம் பலராமர் தீர்த்த யாத்திரை செய்த போது நாராயணாத்ரியில் (ஸனத்குமாரரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட) திருநாராயணனைக் கண்டு: அவர் தங்கள் ராமப்ரியனைப் போலவே இருப்பது கண்டு வியப்புற்றார். இதைக் கண்ணனிடமும் தெரிவிக்க கண்ணனும் இரண்டு திருமேனிகளையும் ஒப்பிட்டுப் பார்த்து, நாராயணாத்ரியிலேயே ராமப்ரியரையும் ப்ரதிஷ்டை செய்தார். அதுமுதல் நாராயணாத்ரி யாதவகிரி யாயிற்று.

● வெகுகாலம் பல சிறப்புகளுடன் கோயில் கொண்டிருந்த எம்பெருமான் முஸ்லிம்களின் படையெடுப்பின்போது (கி. பி. 11 ம் நூற்றாண்டில்) ஒரு துளசிக்காட்டில் மறைத்து வைக்கப்பட்டார். ஆனால் உத்ஸவரான ராமப்ரியரை முஸ்லிம் அரசனுடைய மகள் டெல்லியில் தன்னுடைய அந்தப்புரத்திற்குக் கொண்டு போய்விட்டாள்.

● இச்சமயத்தில்தான் சோழ நாட்டிலிருந்து ஸ்ரீராமானுஜர் இப்பிரதேசத்திற்கு எழுந்தருளினார். திருமண் தேடும் போது துளசிக்காட்டில் மறைந்திருந்த திருநாராயணனைக் கண்டெடுத்து கோவில்கட்டி மூலவராக எழுந்தருளப் பண்ணினார். அவ்வூருக்குத் திருநாராயணபுரம் என்று பெயரிட்டார். ஆழ்வார் பாடல் இல்லாத குறையைப் போக்க, நம்மாழ்வாரின் "ஒரு நாயகமாய் .." என்ற திருவாய்மொழிப் பதிகத்தை (4—1) திருநாராயணனுக்கு ஸமர்ப்பித்தார்.

● திருநாராயணனுக்கு ஒரு உத்ஸவமூர்த்தியைப் ப்ரதிஷ்டை செய்யத் திருவுள்ளம் கொண்ட ஸ்ரீராமானுஜர் புராணங்களின் மூலம் ராமப்ரியரைப் பற்றி அறிந்தார். அவர் டெல்லி பாதுஷாவின் மகளின் அந்தப்புரத்தில் இருப்பதை அறிந்து, டெல்லிக்குச் சென்று பாதுஷாவிடம் அவரைத் தருமாறு கேட்டார். பாதுஷாவும் "நீங்கள் அழைத்து, உங்கள் பெருமாள் உங்களிடம் வந்தால் அழைத்துக் கொண்டு போங்கள் என்று சொல்ல ஸ்ரீராமானுஜரும் "வருக வருக இங்கே வாமன நம்பீ வருக இங்கே" என்று அழைத்தார். உடனே ராமப்ரியரும் தம் அர்ச்சா நிலையைக் கடந்து ஓடி வந்து ராமானுஜர் மடியில் ஏறி அமர்ந்து கொள்ள "என் செல்வப் பிள்ளையே" என்று வாரி அணைத்துக் கொண்டார். பின்னர் அதுவே நிலை நின்ற பெயராயிற்று.

● ராமானுஜரும் தம் செல்வப் பிள்ளையான ராமப்ரியரை எழுந்தருளப பண்ணிக் கொண்டு திருநாராயணபுரம் நோக்கிப் புறப்பட்டார். ராமப்ரியரைப் பிரிய மனமில்லாத பாதுஷாவின் குமாரியும் பின் தொடர்ந்து வந்து அவரது திருவடிகளிலேயே ஐக்கியமாகி விட்டாள். இன்றைக்கும் உத்ஸவரின் திருவடிகளில் அந்த நாச்சியார் எழுந்தருளியிருப்பதை ஸேவிக்கலாம். அந்த நாச்சியார், வரநந்தினி, பீபி நாச்சியார் துலுக்க நாச்சியார் என்ற பல பெயர்களால் போற்றப்படுகிறார்.

● மூலவர் திருநாரணன் உத்ஸவர் செல்வநாரணன் (செல்வப்பிள்ளை, ராமப்ரியன்). வண்புகழ் நாரணன்

கர்மார்ச்சா, பலிபேரம் வாழ்புகழ் நாரணன். நின்ற திருக் கோலம்; நான்கு திருக்கைகள். ஆநந்த விமானம், திருக் கல்யாணி தீர்த்தம். தாயார் மூலவர் யதுகிரிநாச்சியார்- உத்ஸவர் கல்யாணி நாச்சியார்.

● புஷ்ப மண்டபம் திருமலை; த்யாக மண்டபம் பெருமாள் கோயில், போக மண்டபம் ஸ்ரீரங்கம். ஞான மண்டபம் திருநாராயணபுரம்.

● கோயிலின் நிர்வாகங்களனைத்தையும் ஏற்பாடு செய்தவர் ஸ்ரீராமாநுஜரே. தாம் ஸ்ரீரங்கத்திலிருந்து திரு நாராயணபுரம் வந்தபோது தம்மைத் தொடர்ந்து வந்த ஐம்பத் திருவரை நிர்வாகர்களாக நியமித்து "செல்வப்பிள்ளையைக் கிணற்றின் கரையிலிருக்கும் குழந்தையைப் பார்த்துக் கொள்வதுபோல பயபக்தியோடு எப்போதும் ஜாக்ரதை யாகப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று நியமித்தார்.

● கோயில் திருவாராதனங்கள்பாஞ்சராத்ர ஆகமவிதிப் படி நடைபெறும் பொருட்டு ஸ்ரீரங்கத்திலிருந்து ஒரு பாஞ்ச ராத்ர அர்ச்சகரை வரவழைத்து நியமித்தார். அந்த பிரதேசத்தில் தம்மால் திருத்திப் பணி கொள்ளப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்களுக்காக ஐந்து ஊர்களில் முதலியாண் டானைக் கொண்டு பஞ்ச நாராயணர்களை ப்ரதிஷ்டை செய்தார்.

● இவ்வாறு பல சீர்திருத்தங்களைச் செய்து கொண்டு சுமார் 12 வருடங்களுக்கு மேல் திருநாராயணபுரத்தில் எழுந் தருளியிருந்த ஸ்ரீராமாநுஜர் தமிழ் நாட்டில் சோழவரசன் குலோத்துங்கன் மாண்டதும் ஸ்ரீரங்கம் திரும்ப விரும்பினர். ஆனல் திருநாராயணபுரத்திலிருந்த அவருடைய சீடர்கள் அவரைப்பிரிய முடியாமல் தவிக்கவே அவர்களுக்காகத் தம்மைப்போலவே ஒரு விக்ரஹத்தை ப்ரதிஷ்டை செய்து அந்த அர்ச்சைத் திருமேனி மூலம் அவர்களுடன் பேசவும்

செய்தார். அந்தத் திருமேனியைக் கண்டு உகந்த அடியார்கள் ராமாநுஜர் அங்கேயே எழுந்தருளியிருப்பதாக மகிழ்ந்தார்கள் இதனால் இன்றைக்கும் திருநாராயணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானாருடைய அர்ச்சைத் திருமேனி (விக்ரஹம்) **தமர் உகந்த திருமேனி** என்று கொண்டாடப் படுகிறது.

● இங்கு நடைபெறும் உத்ஸவங்கள் : பங்குனி மாதம் ப்ரஹ்மோத்ஸவம். ஹஸ்த நட்சத்திரத்தில் தீர்த்த வாரி; 4ம் திருநாள் உலகப்புகழ்பெற்ற **வைரமுடி உத்ஸவமாகும்.** மேலுலகத்திலிருந்து இந்த வைரமுடியை கருடன் கொண்டு வந்ததாகவும் திருநாராயணபுரத்து எம்பெருமான் ஒருவருக்கே இது பொருந்தியிருந்தபடியால் அவருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டதாகவும் கூறுவர். செல்வப்பிள்ளை ஸ்ரீராமாநுஜர் ஸந்நிதிக்கு எதிரே எழுந்தருள உடையவர் திருமுன்பே வைரமுடி செல்வப்பிள்ளைக்கு சாத்தப்படுகிறது. பெருமானை தமது பிள்ளையாகவே போற்றினபடியால் உடையவரே தமது திருக்குமாரனுக்கு மகுடாபிஷேகம் செய்வதாக இவ்வுத்ஸவம் அமைந்திருக்கின்றது.

● மேலும் எம்பெருமானாரின் திருவவதார உத்ஸவமான சித்திரைத் திருவாதிரை உத்ஸவம் மிகவும் விசேஷமாக கொண்டாடப்படுகிறது. மற்றும் வஸந்தோத்ஸவம், டோலோத்ஸவம், க்ருஷ்ணராஜ திருநாள், ராஜமுடி என்கிற அஷ்ட தீர்த்தம் என்பவை முக்யமானவை. மேலும் எம்பெருமானார் திருநாராயணனைப் ப்ரதிஷ்டை செய்த திருநாளான மகர சுக்ல (தை) புனர்வஸு உத்ஸவம் மிகவும் விசேஷமாகும்.

● உடையவர் கடைசியாக அருளிச்செய்த ஆறு வார்த்தைகளுள் ஒரு வார்த்தை "நமக்குப் பிரியமான திருநாராயணபுரத்தில் ஒரு கூரை வீடாகிலும் கட்டிக்கொண்டு வாசம் செய்யுங்கள்" என்பது. அதை நிறைவேற்றப் பாரிப்போமாக.

# கேள்வி - பதில்

C. P. கோவிந்தராஜன், *சென்னை-21.*


கே. ஆழ்வார்களுக்கும் நாயன்மார்களுக்கும் உள்ள வேறு வேறுபாடுகள் யாவை ?

ப. நாராயணனையே உயர்ந்த தெய்வமாகப் போற்றிப் பாசு-ரங்கள் அருளியுள்ளவர்கள் ஆழ்வார்கள். சிவனையே தெய்வமாகப் போற்றிப் பாசுரங்கள் பாடியுள்ளவர்கள் நாயன்மார்கள். ஆழ்வார்களில் பெரும் பாலோர் தாழ்வான குடியில் பிறந்தவர்கள் என்றாலும் அவர்கள் பகவானுடைய உண்மையான பக்தர்கள் என்ற காரணத்தால் அவர்கள் எல்லா வைணவர்களாலும் தொழப்படுகிறார்கள். வைணவக் கோயில்களில் ஆழ்வார் பாசுரங்களுக்கே முக்கியத்வம் அதிகம். கல்யாணம்போன்ற விழாக்களிலும் மற்றும் வைதீக சடங்குகளிலும் ஆழ்வார்கள் அருளிய பாசுரங்கள் வேதத்திற்கு ஒப்பாக அநுசந்திக்கப்படுகின்றன. ஆனால் நாயன்மார்கள் தாழ்குடியில் பிறந்தவர்கள் என்ற காரணத்தினால் வைதிக காரியங்களில் அவர்கள் பாசுரங்களை சைவர்கள் பயன்படுத்துவதில்லை.

S. பத்மநாபன், *சென்னை-17*

கே. வைணவர்கள் நெற்றியில் அணிந்து கொள்ளும் 'திருமண்' பற்றி விளக்கம் தேவை.

ப. திருமன் எனும் சின்னத்தின் இருபுறத்திலுமுள்ள இரண்டு 'கால்கள்' பகவானுடைய இரு திருவடிகளைக் குறிக்கின்றன. அடியிலுள்ள பீடம் (பாதம்) அத்திருவடிகளைத் தாங்கும் ஒருமலர் அல்லது ஆதிசேஷன் எனவும் நடுவில் அணியப்படும் 'ஸ்ரீசூர்ணம்' ஸ்ரீமகாலக்ஷ்மியைக் குறிக்கிறது என்றும் கூறுவர். ஸ்ரீ மஹாலக்ஷ்மியின் புருஷகாரத்தால் (சிபாரிசால்) எம்பெருமானுடைய மலர்த் திருவடிகளை அடைவதே நம் பிறவியின்பயன் என்று விளக்கும் சின்னத்தை அணிவது சிறந்ததாகும்.



# ''கோசல நாடுடை வள்ளல்''

**ஆத்தான் ஸ்ரீ ரெங்காச்சாரியார், எம். ஏ.**

சான்றோர்கள் 'ராமோவிக்ரஹவான் தர்ம:' என்றும், 'க்ருஷ்ணம் தர்மம் ஸநாதனம்' என்றும் அதர்மத்தைக்களைய தர்மமே அவ்வப்போது இராம கிருஷ்ணாதிகளான அவதாரங் களையெடுத்து உலகை உய்விக்கிறது என்று கூறுவர். ''கற்பார் இராமபிரானை அல்லால் மற்றும் கற்பரோ'' என்று நம்மாழ்வாரும் ''மனத்துக்கினியான்'' என்று ஆண்டாளும் சக்ரவர்த்தித் திருமகனை அனுபவித்தனர்.

செவிக்குத் தேனென இராகவன் புகழினைத்திருத்தும் கவிக்கு நாயகன் கம்பனும் பலவிடங்களில் இராமனைக் கருணைக்கடல் என்றும், கருணையார் கலி என்றும் பாராட்டு கிருர். வீரமும், கருணையும் இராமனிடம் போட்டியிட்டு நிற்கின்றன.

இராவணனோடு இராகவன் போர் புரிகிருன். முதல் நாள் போரின் இறுதியில் இராவணன் தன் படையனைத்தை யும் இழந்து வெறுங்கையனாய்க் களத்தில் நிற்கிருன். இது இராவணனது அவலநிலை. விருப்பியிருந்தால் இராமன் ஓர் அம்பால் இராவணனது தலைகளைக் கொய்திருக்கலாம். அப்படிச் செய்ய இராமன் விரும்பவில்லை. அறத்தின் நாயகனல்லவா அவன்! கருணைக் கடலாகிய இராமன் இராவணனைப் பார்த்து ''இன்று போய் நாளை வா'' என்று கூறுகிருன். இது மிகப் பெரிய வீரமாகும். வள்ளுவர் இதைத்தான் ஊராண்மை என்பார்.

''பேராண்மை என்ப தறுகண் ஒன்று உற்றக்கால்.
ஊராண்மை மற்றதன் எஃகு''—என்று குறள் கூறும்

''பகைவர்மேல் கண்ணோடாது செய்யும் மறத்தையே மிக்க ஆண் தன்மை என்பர் ஆன்றோர். அவருக்கு ஒரு தாழ்வு ஏற்படுமாகில் கண்ணோடி அது தீர்த்துக்கொள்ளும்

பொருட்டு ஊராண்மை செய்தலை அதற்குக் கூர்மை என்பர் நூலோர்'' — என்று பரிமேலழகனும் இதற்கு விளக்கம் கூறுவர். ஊராண்மைக்கு உபகாரியாம் தன்மை என்று பொருள். அஃதாவது இலங்கை வேந்தன் போரிடைத்தன் தானை முழுதும் படத்தமியனாய் அகப்பட்டானது நிலைமை நோக்கி அயோத்தியர் இறை மேற் செல்லாது இன்று போய் நாளை தானையோடு வா என விட்டாற் போல்வது' என்று இராமனது செயலை எடுத்துக் காட்டுகிறார்.

இராமன் இராவணனிடம் அப்போது கூறிய மொழிகளைக் கம்பர் பின்வரும் பாடலில் அமைக்கிறார் ;

''ஆள யா உனக்கு அமைந்தன ? மாருதம் அறைந்த
பூளை ஆயின கண்டனை ; இன்று போய்ப் போர்க்கு
நாளை வா என நவின்றனன் நாகிளங்கமுகின்
வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்''

உனக்கு இப்பொழுது எடுத்தாள்வதற்கு எந்தப் படைகள் இருக்கின்றன ! உன்னிடம் இருந்தன யாவும் பெருங் காற்றுக் குலைந்து போன பூளைப் பூப்போல் ஆகிவிட்டன. இதனை நீ நேராகக் கண்டாய். இனி நீ இன்று உன் மாளிகைக்குச் சென்று போர் புரிய ஏற்ற வகையில் நாளை வா என்று மிக்க இளமையுடைய கமுக மரத்தின் மேல் வாளை மீன் துள்ளிக் குதிக்கும் வளமார் கோசல நாட்டின் அரசனான இராமன் சொன்னான் என்பது இதன் பொருள்.

‘‘இன்று போய் நாளை வா’ என்று மட்டும் கூறாமல் இராமன் ‘இன்று போய்ப் போருக்கு நாளை வா’ என்றான். இன்றைய போரில் மிடுக்காகப் போரிட்டும் படையனைத்தையும் இழந்தனை. என் வலிமையையும் நன்கு கண்டிருக்கலாம். உன் பலவீனமும் உணர்ந்திருப்பாய். இந்த அளவில் அறிவு தெளிந்து நீ சென்று சீதையை விட்டு விடுவாயானால் நாளைக்குப் போர் புரிய வேண்டிய அவசியம் இராது. இன்று பெற்ற தோல்வியினால் உன் அறிவு தெளிய வாய்ப்பு உண்டு. அப்படியின்றி இன்னும் உனது மற நெறியை விடாமல்

மீண்டும் போர் புரிவேன் என்ற ஆணவத்துடன் நீ வருவதாக இருந்தால் நீ போய்விட்டு நாளை உன் படையுடன் வா, நானே யும் உன்முன் நின்று என் வலிமையைக் காட்டிப் போர் புரிவேன்''—என்ற கருத்துச் செறிவுடன் இராமன் இவ்வாறு கூறினன்.

இராமனுக்கு இராவணனைக் கொல்ல வேண்டுமென்ற எண்ணம் இல்லை. அவன் மனம் திருந்திச் சீதையை விட்டு விட்டால் அவனை எதுவும் செய்ய வேண்டாம் என்ற கருணை உள்ளம் பெற்றவன் இராமன். முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருவாழ்வும், எக்கோடியாராலும் வெலப் படாய் என்று தான் பெற்ற வரத்தின் செருக்கினால் இராமனை யும் வென்று விடலாம் என்ற நம்பிக்கை இராவணனுக்கு இருந்தது. ஆனால் இப்போது இராமனோடு போர் செய்து வெல்லுதல் அவ்வளவு எளிதன்று என்று இராவணனுக்கு நன்கு விளங்கியிருக்கும். அறிவுடையவன் சிறிது மயக்க நிலை யிலிருந்தாலும் அனுபவத்தால் தெளிவு பிறப்பதும் உண்டு. அந்த வகையில் தன் படைகளில் மிகுந்த நம்பிக்கையும் அதன் மூலம் இறுமாப்பும் கொண்டிருந்த இராவணனுக்கு, அந்த இறுமாப்புக்குக் காரணமான படைவலிமை குறைந்தது கண்டு தனது நம்பிக்கையும் குலைந்திருக்க வேண்டும். தான் செய்தது மாபெரும் தவறு என்ற உணர்வும் ஏற்பட்டிருக்க வேண்டும். அப்படி ஒரு கழிவிரக்கம் உண்டானால் அவனுக்குத் தன்னைத் திருத்திக் கொள்ள ஒரு வாய்ப்பைக் கொடுக்கலாம் என்பது இராகவனது திருவுள்ளம். அதனால் இவ்வாறு சொன்னன்.

இங்கே கம்பர் இராமனை அடையாளம் காட்டும் பாங்கு உரைத் தக்கது. 'நாகிளங்கமுகின் வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்' என்கிறார். கோசல நாடு நீர்வளமும் நில வளமும் மிக்கது. நிலவளத்தை நாகிளங்கமுகினலும், நீர் வளத்தை வாளை (மீன்) தாவுறும் செயலினலும் குறிப்பிடு கிறார். அத்தகைய வளமான நாட்டை உடையவன் வள்ளல் இராமன் என்கிறார். இப்படிக் கூறுவதற்கு இங்கே பயன் ஏதேனும் உண்டோ?

விபீஷணன் இராமனிடம் சரணுகதியடைந்த பொழுது "தாழ்கடல் இலங்கைச் செல்வம் நின்னதே தந்தேன்" என்று கூறி அவனை இலங்கைக்கு மன்னனுக்கிறன். இலங்கைக்கு வேந்தனுக்கி முடி சூட்டுவதாக வாக்குக் கொடுத்து விட்டான். ஆனல் இப்பொழுது இராவணனிடம் கருணை காட்டுகிறன். அதன் பயனுக இராவணன் மனம் திருந்தி, சீதையை இராமனிடம் சேர்த்து விட்டால் அவனை மன்னித்து விடுவான் இராமன். இராவணனே எப்பொழுதும் போல் இலங்கையை ஆண்டு வரலாம்.

இப்படி ஒரு நிலை வந்தால் விபீஷணனுக்குக் கொடுத்த வாக்குறுதி என்னுகும்? சொன்ன சொல் தவறுதவன் இராமன். இராவணனை மன்னித்த கருணைச்செயலால் புகழைப் பெற்றலும் சொன்ன சொல் தவறிய பழிக்கு ஆளாவானே!

இத்தகைய பழிக்கு ஆளாகாமலிருக்க இராமன் தனக்குரிய கோசல நாட்டை விபீஷணனுக்கு வழங்கி விடுவான் என்ற குறிப்பையே கம்பர் இராமனைச் சுட்டும் சொற்கள் உணர்த்து கின்றன. இராமன் கோசல நாட்டிற்குரியவன். அதுமட்டு மல்லாமல் தன்னிடம் உள்ளவற்றை வாரி வழங்கும் வள்ளல். பதினுன்கு ஆண்டுகளுக்குப் பிறகு தன்னைச் சேரவிருக்கும் கோசல நாட்டை வள்ளலாகிய அவன் விபீஷணனுக்கு வழங் கித் தன் வாக்கைக் காப்பாற்றிக் கொள்வான். இக்குறிப்பை வமைத்து "கோசல நாடுடை வள்ளல்"- என்று போற்றினர் கம்பர். கருணையினுல் உண்டாகும் சிறப்புக்கு மேல் இந்த வண்மையினுல் இராமனுக்கு உண்டாகும் புகழ் மிகவும் பெரி தாக அமைந்து விடும்.

ஆனல் நடந்ததோ வேறு. இராமனுடைய கருணையை இராவணன் பயன்படுத்திக் கொள்ளத் தவறி விட்டான். தனது வண்மையைக் காட்டும் நிலை இராமனுக்கு உண்டாக வில்லை. "இன்று போய் நாளை வா"- என்றவளவில் இராகவ னுடைய கருணை நின்றது. அக்கருணை ஊற்று வெள்ளமாகப் பெருகியோட இராவணன் இடம் தரவில்லை. ★

# பகவத் கீதா ஸாரம்

ஸ்ரீ உ.வே. மஹாவித்வான் ப்ரதிவாதி பயங்கரம்
**அண்ணங்கராசாரியர் ஸ்வாமி**

கீழ் முதலத்யாயத்தில் த்ருதராஷ்ட்ரனுடைய வினவுக்கு விடை கூறத் தொடங்கிய ஸஞ்ஜயன், போர்க்களத்தில் நடந்த சில செய்திகளைக் கூறி, அர்ஜுனன் வில்லையும் அம்புகளையும் விட்டெறிந்து நான் இவ்வுறவினரோடு போர் புரிய மாட்டேனென்று சொல்லித் தேரிடையே உட்கார்ந்து விட்டானென்று கூறி முடித்தான். (ஸஞ்ஜயனுடைய வார்த்தையாகவே முதலத்யாயம் முடிந்து நின்றது.) இரண்டாமத்யாயமும் ஸஞ்ஜயன் தொடங்குகிறான். போர்புரிய மாட்டேனென்ற அர்ஜுனனைக் கண்ணபிரான் தேற்றுவதும், மீண்டும் அர்ஜுனன் கலங்கிப் பேசுவதும், கண்ணனைச் சரணமடைந்து தன்னுடைய வ்யாமோஹத்தை விலக்கும்படி வேண்டுவதும், கண்ணபிரான் தத்வோபதேசஞ் செய்யத் தொடங்குவதுமான செய்திகளைக் கூறுவது இரண்டாமத்யாயம்.

இவ்விரண்டாமத்யாயத்தின் பன்னிரண்டாவது ச்லோகத்திலிருந்தே சாஸ்த்ராரம்பமென்று சொல்லலாம். அதற்குக் கீழுள்ள பாகங்களெல்

லாம் அவதாரிகையாகவே நிற்கிறது. அந்த பன்னிரண்டாவது ச்லோகம் எவ்விதமாகவுள்ள தென்று பார்க்கவேணும். "நத்வேவாஹம் ஜாது நாஸம் ந த்வம் நேமே ஜநாதிபா:, ந சைவ ந பவிஷ்யாமஸ் ஸர்வே வயமத: பரம்" என்பதே அந்த ச்லோகம். இதன் பொருள் யாதெனில், ஸர்வேச்வரனாகிய நானும் இதற்கு முன்கழிந்த அநாதிகாலத்திலும் இருந்தவனே; அர்ஜுநா! நீயும் இந்த அரசர்களுமான க்ஷேத்ரஜ்ஞர்களுங் கூட முன்பும் இருந்தவர்களே. முன்பு இருந்தது மாத்திரமேயன்றிக்கே மேலுள்ளகாலமு மெல்லாம் நானும் நீங்களும் இருக்கப் போகிறவர்களே என்பதாம். ஸர்வேச்வரனாய் பரமாத்மாவான நான் நித்யன் என்பதில் எப்படி ஸந்தேஹமில்லையோ, அப்படியே க்ஷேத்ரஜ்ஞர்களாய் ஜீவாத்மாக்களான நீங்களும் நித்யர்களென்பதில் ஸந்தேஹமில்லையென்று பகவான் தானே சோதி வாய் திறந்து பணித்துளன். இதனால் ஸர்வேச்வரனை பகவானிற் காட்டிலும் ஜீவாத்மாக்களுக் குண்டான பேதமும், அந்த ஜீவாத்மாக்களுக்குப் பரஸ்பரமுண்டான பேதமும் பாரமார்த்திக மென்று பகவான் தானே வ்யக்தமாகத் தெரி வித்ததாய்த் தேறுகிறது. இந்த ச்லோகம் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தத்திற்கு அடிப்படை யாகவுள்ளதென்று நன்குணரலாம். நமது பாஷ்யகாரர் இந்த ச்லோகத்திற்கு இட்டருளி யிருக்கின்ற பாஷ்யம் மிகவும் விபுலமாகவுள்ளது.

கீழே அர்ஜுனன் (2-7) ''ப்ருச்சாமி த்வா தர்மஸம்மூடசேதா:, யச்ச்ரே யஸ்ஸ்யாத் நிச்சிதம் ப்ரூஹி தந்மே சிஷ்யஸ்தேஹம் சாதி மாம் த்வாம் ப்ரபந்நம்'' என்று, தத்வார்த்தம் தெரியாமையினாலே தான் தளும்பியிருப்பதாகவும் தன்னுடைய கலக்கம் தீர தத்வார்த்தத்தை அறுதியிட்டு அருளிச்செய்ய வேணுமென்றும் சொல்லித் திருவடிகளில் விழுந்து யாசித்திருக்கிறான். அப்படிப்பட்டவனுக்கு தத்வோபதேசம் செய்யவே இந்த கீதாசாஸ்த்ரம் அவதரித்தது. கீதாசார்யன் கலங்கினவனுக்குச் சொல்லும் போது தெளிவான பொருளைச் சொல்லுவனே யல்லது கலங்கின பொருளையே சொல்ல மாட்டானன்றோ. ஆகவே இந்த சாஸ்த்ரத்தில் கூறப்படும் பொருள்கள் யாவும் ஸர்வாத்மநா பாரமார்த்திக மென்றே வைதிகர்கள் கொள்ளக்கடவர்கள். அதிலும் ஆரம்ப ச்லோகமான இதனில் கூறப்படும் விஷயம் உபநிஷதாதிகளில் வடிக்கட்டின பொருளாகவே யிருக்கத்தகும். இதில் ஜீவாத்ம பரமாத்ம பேதம் முதலியன தெரிவிக்கப்படுமவை அபாரமார்த்திகமாக இருக்கச் சிறிதும் ஔசித்யமில்லை. ஆக இந்த நிரூபணங்களினால் ஸ்வாமியெம்பெருமானார் உபநிஷத்து, ப்ரஹ்மஸூத்ரம், கீதை முதலானவற்றின் பொருள்களை ஆர்ஜவத்துடன் அறிந்து அறுதியிடுபவர் என்பது நிஷ்பக்ஷபாதர்களுக்குக் கையிலங்குநெல்லிக்கனியாகும். இப்பெருமை பொலியவே யதிராஜஸப்ததியில் ''யதாபூத ஸ்வார்த்தா யதிந்ருபதிஸூக்திர் விஜ

யதே'' என்று வேதாந்த தேசிகனுல் பொருத்த மாகப் பேசப்பட்டது.

இனி ப்ரக்ருதத்திலே செல்வோம்' *நத்வேவாஹம் ஜாது நாஸம்* என்கிற ச்லோகத்திலே ஜீவாத்ம பரமாத்ம பேதமும் ஜீவர்களுக்குப் பரஸ்பர பேதமு மாகிற விவை காட்டப்பட்டது போல அதற்கடுத்த (13) ச்லோகத்தில் ''தேஹிநோஸ்மிந் யதா தேஹே கௌமாரம் யௌவநம் ஜரா, ததா தேஹாந்தரப்ராப்தி: தீரஸ் தத்ர ந முஹ்யதி.'' என்பதில் ப்ரக்ருத்யாத்ம விவேகமும் காட்டப்பட்டது. அசேதநம் வேறு, சேதநன் வேறு என்கிற பகுத்துணர்வே ப்ரக்ருத்யாத்ம விவேக மெனப்படும். நிர்விசேஷ சிந்மாத்ரமான ப்ரஹ்ம மொன்று தவிர வேறு சேதநா சேதநங்கள் உண்மையில் கிடையாது என்கிற வாதம் இங்கு நிராகரிக்கப்பட்டதாகிறது. ''அந்தவந்த இமே தேஹா:'' ''ந ஜாயதே ம்ரியதே வா கதாசித்,'' ''வாஸாம்ஸி ஜீர்ணாநி யதா விஹாய.'' இத்யாதிகளான ச்லோகங்களினுல் ஆத்மா நித்யனென்றும், தேஹம் அநித்யமென்றும் பரக்கச் சொல்லுகிற முகத்தாலும் சேதநாசேதநங்களின் ஸத்பாவம் பாரமார்த்திகமாகவே ஸ்தாபிக்கப்பட்டதாகிறது. ஆக, கீதாசாஸ்த்திரம் விசிஷ்டாத்வைதிகளுக்கே நிதியானதென்றும் மற்றையோர்க்கு இது கொண்டு பணியில்லை யென்றும் சொல்லிற்றாயிற்று.

(தொடரும்)

# திருவாய்மொழியும் த்வயமும்

ந்யாய வேதாந்த வித்வான் வாகம்ருத வர்ஷி
ஸ்ரீ உ. வே. வேளுக்குடி K வரதாசாரியார் ஸ்வாமி

''த்வயார்த்தம் தீர்க்க சரணாகதி யென்றது ஸார ஸங்க்ரஹத்திலே'':—நம்மாழ்வார் அருளிச் செய்த திருவாய்மொழி த்வயார்த்தத்தை விசதமாகக் காட்ட வல்லது என்று பிள்ளை உலகாரியன் ஸார ஸங்க்ரஹம் என்கிற ரஹஸ்ய ப்ரபந்தத்திலே யருளிச் செய்துள்ளார். அதனையாதார ப்ரமாணமாகக் கொண்டு மேலே இரண்டு பத்துக்களினுடைய அர்த்தமாக ஸ்ரீமத் பதத்தினுடைய அர்த்தத்தையும் நாராயணபதத்தினுடைய அர்த்தத்தையும் அநுபவித்தோம். மூன்றாம்பதமாம் சரண சப்தத்தினுடைய அர்த்தமாக மூன்றாம்பத்தினுடைய அர்த்தங்களை யீண்டு அநுபவிப்போம். எம்பெருமானுடைய திவ்ய மங்கள விக்ரஹ ஸம்பந்தத்தை ஆழ்வார் மூன்றாம்பத்தில் அநுபவிக்கிறார் என்பது ''முடிச் சோதியாய் உனது முகச் சோதி'' என்ற முதல் பாசுரத்தினாலேயே விளங்குகிறது. முதல்பத்தால் பகவானுடைய உபாயத்வமும், இரண்டாம் பத்தால் பகவானுடைய உபேயத்வமும் கூறப் பட்டது. உபாயத்வ உபேயத்வங்கள் திவ்ய மங்கள விக்ரஹ விசிஷ்டனுக்கு என்பதனை ஆழ்வார் திருவுள்ளம் பற்றி மூன்றாம்பத்தால் திருமேனியை வர்ணிக்கிறார் என்று தேசிகன் த்ரமி

டோப நிக்ஷத்ஸாரத்தில் அருளிச் செய்துள்ளார் என்று முன்பே கூறப்பட்டது. பரமாத்மாவுக்கு குணமில்லை விக்ரஹமில்லை விபூதியில்லை. நிர்விசேஷசிந்மாத்ரம் ப்ரஹ்மம் என்பர் பரசமயிகள். அது அவைதிகம் என்பது தோற்ற பரம வைதிகரான ஆழ்வார் முதல் முன்னமே, "நல முடையவன்" "அருளினன்" என்று குணயோகத்தையும், "அயர்வறும் அமரர்கள் அதிபதி" என்று நித்யவிபூதி யோகத்தையும், "நிலனிடை விசும்பிடை யுருவினன் அருவினன்" என்று லீலா விபூதி யோகத்தையும் "துயரறு சுடரடி" என்று திவ்ய மங்கள விக்ரஹ யோகத்தையும் அருளிச் செய்தார். அது தன்னையே மேலே பலபடிகளாக விஸ்தரித் தருளுகிறார். அவற்றில் திவ்ய விக்ரஹ ஸம்பந்தத்தை விவரித்துக் காட்டும் பத்து மூன்றும்பத்தாகும். த்வயத்திலே சரண சப்தத்தாலே திருவடிகள் கூறப்பட்டாலும் திருமேனி கூறப்பட்டதாகவே கொள்ள வேண்டும்.

"சரணௌ - திருவடிகளை" "இத்தால் சேர்த்தி யழகையும் உபாய பூர்த்தியையும் சொல்லுகிறது" "பிராட்டியும் அவனும் விடிலும் திருவடிகள் விடாது. திண்கழலாயிருக்கும்" "சேஷிபக்கல் சேஷபூதன் இழியும் துறை ப்ரஜை முலையிலே வாய் வைக்குமா போலே" "இத்தால், பிராட்டிக்கு இருப்பிடமாய் குணப்ரகாசகமுமாய் சிசுபாலனையும் அகப்படத் திருத்திச் சேர்த்துக் கொள்ளும் திருமேனியை நினைக்கிறது" என்று முமுக்ஷுப்படி ஸூத்ரங்கள்

இங்கே யநுஸந்தேயங்கள். "சரணௌ - என்று, பிராட்டியும் எம்பெருமானும் விடிலும் விடாத திண்கழலாய், முழுதும் வந்திறைஞ்சும் மென் தளிர் போல் அடியாய் வந்திறைஞ்ச இராதே, கமலபாதம் 'வந்து என்னும்படி நீள்கழலாய்ச் சாடுதைத்தவொண் மலர்ச் சேவடியாகையாலே யாவர்க்கும் வன்சரணாய் அழுங்குழவிக்கும் பேதைக் குழவிக்கும் தாரகமுமாய் போக்யமுமாய் இணைத் தாமரையடி என்னும்படி சேர்த்தியழகை யுடைத்தான திருவடிகளைச் சொல்லுகிறது. அவன் 'மாம்' என்று தன்னைப்பற்றச் சொன்னாலும், சேஷபூதர், "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்" "எந்தை கழலிணை பணிமின்" "ஆயனடியல்லது" "நின்னடி யன்றி மற்றறியேன்" என்று கண்ணனைத்தாள்பற்றக் கடவர்களிறே. இணைத் தாமரைகட்கு அன்புருகி நிற்கும் அது நிற்கச், சிலம்படியிலே மண்டுகிறவனுக்கு, ருசிஜநகத்வம் முதலாக நித்ய கைங்கர்யம் எல்லையாக நடத்துவது திருவடிகளைக் கொண்டிறே. இத்தால் புருஷகாரமான பனி மலராள் வந்திருக்குமிடமாய், சுடர்வான் கலன் செய்த மாணிக்கச் செப்பு போலே ஸ்வரூப குணங்கள் நிழலெழும்படியாய், திருமேனி கிடந்ததுவே என்னும்படி அவை யொழியவும் தானே கார்யம் செய்யவற்றாய், சிசுபாலனோடு சிந்தயந்தியோடு வாசியற ஸித்த ஸாத்யரூபமான உபாயங்களால் செய்யும் கார்யத்தையும் தானே செய்து, "அலவலைமை தவிர்த்த" "காதல் கடல் புரைய விளைவித்த" என்னும்படி அத்வேஷத்தையும் பரபக்தியையும் உண்டாக்கி, தன்னோடே

சேர்த்துக் கொள்ளும் திருமேனியை நினைக்கிறது'' என்று அருளிச் செயல் ரஹஸ்யத்திலே அழகிய மணவாளப் பெருமாள் நாயனாரும் அருளிச் செய்துள்ளார்.

சரணௌ - என்று இரண்டு திருவடிகளைச் சொல்லுகிறவித்தால் ''இணைத்தாமரையடி'' என்கிறபடியே இரண்டு தாமரைப் பூவை நிரைத்து வைத்தாற் போலே யிருக்கிற சேர்த்தியழகையும், த்விவசநம் இரண்டுக்கு மேல் மற்றொன்று புகுர ஸஹியாமையாலே ஸஹாயாந்தர நிரபேக்ஷமான உபாய பூர்த்தியையும் சொல்லுகிறது என்கை.

ஸ்ரீமத் பதத்திலே புருஷகார பூதையாகச் சொன்ன பிராட்டியும், அவள் தானே சிதகுரைக்கிலும் ''என்னடியார் அது செய்யார்'' என்னும்படி நாராயணபதத்திற் சொன்ன குண விசிஷ்டனான அவனும், கை விடிலும் திருவடிகள் தன் வைலக்ஷண்யத்தாலே துவக்கிக் கொள்ளுகையாலே கை விடாது. ''வண்புகழ் நாரணன் திண்கழல்'' என்கிறபடியே பற்றினரை நழுவவிடாதே திண்மையை யுடைத்தாயிருக்கும் என்கை.

சேஷிபக்கல் ஆச்ரயிக்க இழியும் சேஷபூதன் தன்ஸ்வருபாநுகுணமாக இழியும் துறை திருவடிகள். ஸ்தநந்தயப்ரஜை தாயினுடைய அவயவமெல்லாம் கிடக்கத் தனக்கு வகுத்ததாய் உள்ள முலையிலே வாய் வைக்குமா போலே யென்கை. இச் சரண சப்தத்தை விளக்குவதே மூன்றும் பத்து (தொடரும்)

# ஒரு துளி

## V. பிரேம வரதன்

திருவிக்ரமாவதாரத்தில் விண்ணளந்தமாதவனின் பாதங்களில் இருந்து மிளிர்ந்த நூபுரத்தில் தேவர்கள் பூஜை செய்த தீர்த்தத்தின் பல துளிகளில் ஒரு துளியாக நான் பூமியை நோக்கி வந்து கொண்டிருக்கிறேன். எத்தனை அபாக்கியவான் நான். நூபுரத்திலேயே ஒட்டி உலர்ந்து இருக்கலாம்; மாதவனின் திருவடியாவது கிட்டி இருக்கும். ஐயோ பூமியில் இறங்கிப் போகும் அளவிற்கு நான் என்ன பாவம் செய்து விட்டேன். கிட்டிய பாத தூளியை விட்டுப் பாதகர்கள் வாழும் பூமியில் என்னை என்னவாக இருக்கத் தள்ளி விட்டார்கள்? எத்தனையோ யுகம் தவமிருந்து பெற வேண்டிய பாததூளியை ஒரு நிமிட நாழிகைக்குள் துறந்து வந்துவிட்ட நான் எத்தனை பாவம் செய்திருக்கிறேன்.

வெண்மேகக் கூட்டங்கள் விதம் விதமான அலங்காரங்களுடன் விண்ணை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றன. மான்போல, மயில்போல, மண்டபம் போல், அரண்மனை ஆசாரவாயில் போல், நீண்ட பூங்கொத்தின் இதழ்கள் போல் விதம் விதமான தோற்றம் விண்ணுக்கே ஓர் புதுமைக் கோலம். திட்டுத் திட்டாய் யானை போல், மலைபோல், குன்றுபோல், மரத்தைப் போல், பூதம் போல் நகர்ந்து வரும் கரும் மேகக்

கூட்டங்கள் ஆங்காங்கே தன் ஆதிக்கத்தைச் செலுத்தியவாறு இருந்தன. எதன் மீதும் படா மல்எல்லாவற்றையும் ஓர் அலட்சியமாகப்பார்த்த வாறு நான் கீழே கீழே வந்து கொண்டு இருக் கிறேன். விண்ணளந்த பாதம்தான் கிட்ட வில்லை. மண்ணளந்த பாதமாவது கிட்டுமா? ஆழ் வார்கள் கூட 'இச்சுவை தவிரயான்போய் இந்திர லோகமாளும் அச்சுவை பெறினும் வேண்டேன்' என்றார்களாம். அப்படியாகிலும் சதா அவன் திருவடியைத் தொட்டுக் கொண்டு நித்யமான வாழ்க்கையை வாழ ஒரு வழி தெரியுமா என்ற ஒரே மனநிலையில் ஒரே சிந்தனையுடன் வரு கிறேன். வேகத்தின் பரிணாமத்தை எடை போட முடியாத மைல்கள். நாட்கள், மாதங்கள் வரு டங்கள் என பறந்து கொண்டிருக்க நான் இன்னும் இன்னும் கீழே வந்து கொண்டிருக் கிறேன். நான் எதற்காக இப்படி வந்து கொண்டு இருக்கிறேன். என் பயணத்திற்கு என்ன அர்த் தம் இருக்கிறது? எங்கே அது முடியப் போகிறது? என் கண்கள் குளமாகின்றன. நான் அழுகிறேன்.

அடர்ந்த மலைத் தொடர்கள் என் கண்ணை மறைக்கிறது. நீலமேனி ஐயோ! நிறை கொண் டது என் நெஞ்சையே என்று ஆழ்வார் பாடியது எத்தனை உண்மை! கடல்நிற வண்ணனைக்கண்ட என் கண்கள் இனி மற்றொன்றினைக் காணுது என்றுஎன் மனம் ஆர்ப்பரிக்கிறது. அசைந்தாடும்

தாமரைகள் தடாகத்தில்பூத்திருக்கின்றன. அதன் மீது விழுந்து விடாமல் மெல்ல அதைப் பார்த்த வாறே நகர்ந்து விடுகிறேன். செவ்வரியோடிய அதன் இதழ்கள், நீண்ட அப்பெரிய வாய கண் களை உடையவனை எனக்கு நினைவுகூறச் செய் கிறது. என் கண்கள் சிவக்க நான் அழுது அழுது என்நிலை மறந்து விடுவேனோ என்ற நிலை. இதோ பெரிய கடல் எங்கும் ஜலம், ஜலம் ஓ...எத்தனை பெரிய கடல்! நீலநிற உடலும் ஜரிகை ஓரமும் கொண்ட பட்டுப் புடவை போல் விரிந்து இருக்கிறது. நான் எங்கே எப்படி ஒதுங்கி எவ்வாறு இதைக் கடந்து என்னைப் பேதமை செய்தவனை அணுகி அவன் பாதத்தில் விழுந்து கதறுவேன் என்று எண்ணுகிறேன். எனக்கு ஒன்றுமே புரிய வில்லை. காரொளி வண்ணனைக் கண்ணனைக் கதறிக் கதறி அழைத்த வாறே கண்ணை இறுக மூடிக் கொள்கிறேன். நான் விழுந்து விட்டேன்...? எங்கே?...!

மயக்கம் தெளிந்து பார்க்கிறேன். ஓ...நான் கடலில் விழவில்லை. அலை என்னைக் கொண்டு போய் எங்கோ தள்ள வில்லை. பத்திரமாய் பாது காப்பாய் கர்பக்கிருகத்தில் இருப்பது போல் திறந்த ஒரு சிப்பிக்குள் விழுந்திருக்கிறேன். நான் உண்மையில் பாக்கியம் செய்திருக்கிறேனோ? மெல்ல, மெல்ல அந்த சிப்பியின் வாய் மூடிக் கொள்கிறது. நான் மோனத்தில் ஆழ்ந்து முக் திக்கு வழி காண முயல்கிறேன்.

நீண்ட கால இடைவெளிக்குப் பிறகு என்னிடம் ஒரு மாறுதல். நான் நல்லதொரு முத்தாய் உருவெடுத்திருக்கிறேன். இப்போது மீண்டும் ஒரு கவலை. என்னை முத்துக் குளித்து எடுத்துப் போய் யாரிடம் விற்பார்கள்? அவர்கள் என்னை மாலையில் கோர்த்து யாரிடம் தருவார்கள்? சே, கேவலம் மானுட உடலையா நான் அலங்கரிப்பேன்? நித்யமான ஸர்வேச்வரனின் அலங்காரப் பொருளாய் இருக்கத் தானே உருவெடுத்திருக்கிறேன். என் மனம் தடுமாறுகிறது. என் பக்தியில் எனக்கே சந்தேகமா? எண்ணங்களின் தடுமாற்றம் தொடர்கிறது.

முத்தெடுக்க வருகிறார்கள். நல் முத்துக்களை வாரி வாரிக் கொட்டி விலை பேசுகிறார்கள். நான் வெட வெடவென்று நடுங்கியவாறே உருள்கிறேன். நல்லதனவந்தர் ஒருவர் என்னை வாங்கி விடுகிறார். நான் இனி அவர் தொடும் பொருளாகி விட்டேன். ஆண்டவனே, பரந்தாமா, இதற்கா நான் பரம ஜாக்ரதையுடன் பூமிக்கு வந்தேன்? சிப்பிக்குள் புகுந்தேன்; முத்தானேன். உன்னை அடைவதற்குத் தானே நான் யுகயுகமாகத் தவம் கிடக்கிறேன். நான் அழுத கண்ணீருக்கு சக்தி உள்ளதா?

பொன்னில் என்னைப் பதித்து மாலையாக்கிப் பார்க்கிறார் தனவந்தர். ஏன் அதற்காக நான் நோய்வடைகிறேன்? பெரிய பெரிய மாலைகளுடனும் சுற்றத்தாருடனும் என்னையும் சுமந்த

வாறு எங்கோ போகிறார் தனவந்தர். கல்யாண வீட்டிற்கா? மண மகளின் கழுத்தை அலங்கரிக்க ஆடம்பரப் பொருளாகவா? நான் ஏன் இத்தனை அவசரப்படுகிறேன்.

கோலமாமணியாரமும் முத்துத் தாமமு மணிந்த திருமால் சன்னதிக்குள் நுழைகிறார்கள் அனைவரும். ஓ...நான் பரவசத்தால் புளகாங்கிதம் அடைகிறேன். மேள வாத்தியம் முழங்க, தூப, தீப, ஆராதனைதிகளுடன் அர்ச்சகர் என்னை எடுத்து எவ்வரி வெஞ்சிலைத் தடக்கை ராமனின் பரந்த மார்பினில் சாத்துகிறார். ஓ நான் எத்தனை பாக்கியசாலி...என் மனமெல்லாம் லேசாய், மனோகரமாய் இருக்கிறது. அவன்மார்பை, அந்த திருவார மார்பை அலங்கரிக்க நான் என்ன புண் ணியம் செய்திருக்க வேண்டும். திருமகளோடு இனிதமர்ந்த அந்த செல்வனை மறவாத உள்ளத் துடன் 'என்றும் துதிக்க எனக்குத்தான் எப்படி ஒரு வாய்ப்பு கிட்டி உள்ளது. கோயில் மணி கண கண வென்று ஒலித்து நான் மாதவனின் உடைமை, உடைமை என்பதை நிதர்சனப் படுத்துகிறது. தீபச் சுடரொளியில் நான் முத்தாய் மிளிர்கிறேன். எத்தனை நிம்மதி எனக்குக் கிடைத்திருக்கிறது! பெருமாளே என் எண்ணம் நிறைவேறி விட்டது.

—: ※ :—

# திருநாராயணபுரம்

வித்வான், ந்யாயசிரோமணி, சொல்வேந்தர், "பிள்ளைலோகம்
ஸ்ரீ உ. வே. ஸ்தலசயனத்துறைவர் ஸ்வாமி

**குன்றின் மேலிட்ட விளக்கு :** பகவான் மிக்க பெரும் புகழ் கொண்டவன்; அளவற்ற பெருமை மிக்கவன்; நெஞ்சால் நினைக்கவும் அரியன்; சொல்லுக்கு எட்டாதவன்; எல்லா வகைகளிலும் மிக்கவன். அவனைப் பெரியோர் "விளக்கு" என்பர். 'வேதாந்த விழுப்பொருளின் மேல் இருந்த விளக்கு" என்றார் பெரியாழ்வார். தன்னையும் விளங்க வைத்துக் கொண்டுப் பிறபொருள்களையும் விளங்க வைப்பதே விளக்கு! இவனை நந்தா விளக்கு, நுந்தா விளக்கு, தூங்கா விளக்கு, தூண்டா விளக்கு என்று பலவாறு கூறலாம். ஆனால் மறை யாய் விரிந்த விளக்கு இவனே!

ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஸந்தியாவந்தனத்தின் முடிவில் நாள்தோறும் மூன்று முறை நான்கு எம்பெருமான்களை நினைப்பதுண்டு; திசைநோக்கிக் கைகூப்பிவணங்குவதுமுண்டு. முதல்வர் நம்பெருமாள். அவரை மங்கள நிதி என்றோ மங்கள மணி என்றோ கூறுகிறார்கள். "மங்களானாம் ச மங்களம்" எனப்படுகிற ஸ்ரீமந் நாராயணனை வணங்கின லன்றோ நமக்கும் மங்கலம் உண்டாகும். அடுத்தவர் திரு வேங்கடமுடையான். அவரே கனவருள் பொழியும் காள மேகம்! காளமேகம் மலையுச்சியிலேயே தங்கி இருக்கும்! அவனைத் தவிர வேறு ரக்ஷகன் இல்லை; காளமேகத்தையன்றி மற்றொன்றிலங்கதியே! காஞ்சீபுரத்திலுள்ள ஸ்ரீ தேவப் பெருமானே பாரிஜாதம் கேட்ட வரமளிக்கும் கற்பகம்! அவ்வளவு ஏன்? தானே தன்னைத்தரும் கற்பகம்! அடி யார்கள் வேண்டுவதையெல்லாம் கொடுத்து அருளுவதையே விரதமாகக் கொண்டவன். அர்த்திநாம் அர்த்திதார்த்த பரிதான தீக்ஷிதன்! பரம், வ்யூஹம், விபவம் ஆகிய நிலை களில் கொண்டிருந்த தேஜஸ்ஸைக் காட்டிக்கொண்டு

அர்ச்சாவதாரமாக யாதவகிரியில் விளக்காய்த் திகழ்பவன் திருநாராயணன்! இந்நால்வரையும் நினைப்பவர் நால்வேதங் களையும் உணர்ந்தவராவர். நாற்பெரும் பயன்களையும் பெறுவர்! ஆதலால் வண்புகழ் நாரணன் திண் கழல் போற்றுமின! 'ஸ்ரீசம் நமாமி சிரஸா யது சைல தீபம்'!

**ஆசார்யாபிமானமே உத்தாரகம்:** பகவான் தானுகவே விரும்பி எழுந்தருளி இருக்கும் தலங்கள் இருக்கின்றன. பரி வுடன் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி நிலையாக வாழும் இடங்களும் இருக்கின்றன. திரு நாராயணபுரம் கர்நாடக (மைசூர்) மாநிலத்தில் இருக்கிறது. ஸ்ரீ ராமாநுஜர் ஆசாரியவரர்! அவர் அபிமானித்த நாடு மைசூர் மாநிலம். எம்பெருமானாரின் பூர்ண கடாக்ஷத்தைப் பெற்றதால் லக்ஷ்மீ கடாக்ஷமும் ஸரஸ்வதி கடாக்ஷமும் ஒருங்கே மிளிரும் இடம் மைசூர் மாநிலம்! திருநாராயணன் ஸ்ரீ ராமநுஜரால் பிர திஷ்டை செய்யப்பட்டவர்! திருநாராயணபுரம் அவரால் தோற்றுவிக்கப்பட்ட திவ்யமான தேசம்! பகவான் அபி மானித்த திவ்ய தேசங்கள் சிறந்தவை! ஆசார்யர் அபி மானித்த இடம் அவற்றை விடச்சிறந்தது. மற்ற எம் பெருமான்களை நாம் ஸேவிக்கும்போது எம்பெருமானுக்கு உகப்பு; திருநாராயணபுரத்தை நினைத்தாலும், அங்கு சென்றாலும் திருநாரணனை ஸேவித்தாலும் எம்பெரு மானருக்கு இனிதுவப்பு. அதுதானே நமக்கு வேண்டும்! ஆதலால் ஆசார்யாபிமானமே உத்தாரகம்!

**பேரும் பல பலவே:** திருநாராயணபுரத்திற்குப் பல பெயர்கள் உண்டு. 'தென்பதரி' என்று ஒரு பெயர். கிருத யுகத்தில் தத்தாத்ரேயர் இங்கிருந்து, கொண்டு வேதங்களைப் பிரவசனம் செய்தார். அதனால் 'வேத பர்வதம்' என்று மற்றொரு பெயர் ஏற்பட்டது. திருநாராயணன் ஆனந்த மய விமானத்தோடு இம்மலையில் இருப்பதால் 'நாராயணாத்ரி' என்றும் ஒருபெயர். துவாபரயுகத்தில் முடிவில் (கண்ணன்

உள்ளிட்ட)'யாதவர்கள் வந்து' திருநாரணனை ஸேவித்ததால் 'யாதவாத்ரி' என்று பெயர் தோன்றியது. கலியுகத்தில் ஸ்ரீராமானுஜரால் ஜீர்ணோத்தாரணம் செய்யப்பட்டதால் 'யதிசைலம்' என்றும் பெயர் பெற்றது.

**கங்கா ஸ்நானம் ஆயிற்று?:** தீபாவளியன்று 'கங்கா ஸ்நானம்' ஆயிற்று? என்று பலர் கேட்கிறார்கள். மகிழ்வுடன் இருக்கும் உள்ளமும் 'கங்கைக்குச் சென்று நீராட முடியவில்லையே' என்று குறைபடுகிறது. ஏன் அந்தக் குறை? ஒவ்வோராண்டும் பங்குனி மாதத்தில் கங்கை மற்ற தீர்த்தங்களோடு இங்குள்ள (திருநாராயண புரத்திலுள்ள) கல்யாணி தீர்த்தத்தில் (புஷ்கரிணியில்) வசிக்கிறாளாம். அதில் ஒரு முறை நீராடுங்கள்! இயன்ற அளவு தானம் செய்யுங்கள்! சிறிதளவு செய்தாலும் பெரும்பயன்! கங்கா ஸ்நானம் செய்ததாகவும் ஆகும்! ஒருமுறையேனும் சென்றீர்களா? கல்யாணி ஸ்நானம் ஆயிற்று? அல்லது கங்கா ஸ்நானமே ஆயிற்று! ஒருநாள் ஸ்ரீராமானுஜர் கல்யாண தீர்த்தத்தில் நீராடச் சென்றார். அப்போது ஸ்ரீரங்கத்திலிருந்து மாருதிச் சிறிய ஆண்டான் என்பவர் வந்தார்; 'கூரத்தாழ்வானிடமும் பெரிய நம்பியிடமும் அபசாரப்பட்ட சோழன், கழுத்தில் புண்பட்டுப் புழுத்து மாண்டான்' என்று ஸ்ரீராமானுஜரிடம் கூறினார். உலகத்திற்கே மங்களமான இச் செய்தியைச் செவியுற்ற இடம் கல்யாண தீர்த்தம்! இந்தத் தீர்த்தம் பெயருக்கேற்ற பொருளையும் பெற்றதாயிற்று! என்றும் கூறுவர்.

**காஷாயம் தந்த பரிதான சிலை :** ஒரு காலத்தில் தத்தாத்ரேயர், வேதங்கள், அவற்றின் அங்கங்கள், வேதங்களின் உபாங்கங்கள் ஆகியவற்றைச் சீடர்களாகக் கொண்டு ஒரு குளக்கரையில் வேதார்த்தங்களை உபதேசித்தார். அதனால் அக்குளத்திற்கு வேதபுஷ்கரிணி என்று பெயர் ஏற்பட்டது. அக்குளக்கரையில் இருக்கும் ஒரு கல்லின்மேல் (உடுக்கும் ஆடையான) காஷாயத்தை வைத்து, அதை எடுத்து உடுத்திக் கொண்டார்.

**நடை வடை குடை முடி :** பலர் அடிக்கடி சொல்லும் புது மொழி இது! 'இப்போதும் நடையழகை நம் பெருமாளிடம் ஸேவிக்கலாம்' என்று ஆசாரியர்கள் கூறிவிட்டார்கள்! நடையழகன் நம் அரங்கன்! வடை திருப்பதியில்! வடை என்றும் கெடாமல் இருப்பதைக் கொண்டே திருவேங்கடவன் அமுது செய்யும் பிரஸாதத்தின் பெருமையை அறியலாம். ஸ்ரீ தேவப்பெருமாள் மிக்க பெருங்குடைகளோடு வாஹனத்தில் எழுந்தருளும் காட்சி வேறெங்கும் காண முடியாதது ஒன்று. மிகப் பெரிய வெண்கொற்றக் குடை காஞ்சிக்கே தனிச்சிறப்பாகும். முடி திருநாராயண புரத்தில்! செல்வப்பிள்ளை ஆண்டுதோறும் ஒரு நாள் விலை மதிப்பைக் கடந்த வைரமுடியை அணிந்து கொள்கிறார். அதுவும் எம்பெருமானார் ஸன்னதி முன்னிலையிலேயே அணிவிக்கப்படுகிறது.

பாற்கடலுள் பையத்துயின்ற பரமனின் கிரீடத்தை விரோசனன் என்ற அசுரன் களவாடி மறைந்தான். இதை யறிந்த கருடன் பாதாளலோகம் சென்றார். விரோசனனை வென்று அக்கிரீடத்தை வான்வழியாக எடுத்து வந்தார். ஆநிரைகளை மேய்த்துக் கொண்டிருந்த கண்ணன் திருமுடியில் அதனை அணிவித்தார். கண்ணன் அக்கிரீடத்தை செல்வப் பிள்ளைக்கு அணிவித்தார் அது பொருத்தமாக அமைந்து விட்டது! அதுவே 'வைரமுடி' என்பதை ஐதிஹ்யத்தால் அறியலாம்!

திவ்ய தேசங்களில் வாழவேண்டும். திருநாராயணபுரத்தில் திருநாராயணனின் திருவடி நிழலில் சில நாட்களாவது கட்டாயம் வாழவேண்டும். வாழநினைப்பவர் வாழ்வர் வாழ்வெய்தி ஞாலம் புகழவே!

# தேவு மற்றறியேன்—4

பேராசிரியர் Dr. V. V. ராமாநுஜம்

ஆழ்வார்கள் பதின்மருடைய திருவதார நன்னாட்களையும் அவர்களுடைய அருளிச் செயல்களையும் பற்றி கூறிவிட்டு, மேலே "ஆழ்வார் திருமகளார் ஆண்டாள் மதுரகவியாழ்வார் எதிராசராமிவர்கள்" என்று மூன்று திருநாமங்களை ஒரு கோவையாக அருளிச் செய்கிறார் மணவாள மாமுனிகள் தமது உபதேசரத்தினமாலையில். இவர்களில் நடுநாயகமாகச் சொன்னது மதுரகவிகளை. இவரது நிஷ்டையே ஆண்டாளதும் எதிராசரதும். எதிராசராம் நம்மிராமாநுசன் ஆசார்ய வைபவத்தை வெளியிட்டபடியைச் சிறிது முன்னதாக அநுபவித்தோம். ஆண்டாள் வெளியிட்டபடியைச் சிறிது அநுபவிப்போமிங்கு.

வேதமனைத்துக்கும் வித்தாகும் திருப்பாவையில் கடைசியில் தன்னை **பட்டர்பிரான் கோதை** என்று சொல்லிக் கொள்வது யாவருமறிந்ததே. இப்படியே நாச்சியார் திருமொழியிலும் பலவிடங்களில் தன்னை **விட்டுசித்தன் கோதை** என்று தகப்பனாரான பெரியாழ்வார் ஸம்பந்தத்தையிட்டே தன்னைச் சொல்லிக் கொள்வதும் குறிக்கொள்ளத்தக்கது. "பட்டர் பிரான் கோதை" என்ற சொற்றொடர்க்கு அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் தரும் விளக்கம்: "பெரியாழ்வார் வயிற்றிற் பிறப்பு இவளுக்கு உத்கர்ஷஹேது. 'ஆற்றப்படைத்தான் மகன்' என்றிறே ப்ரதிபாத்யனுக்கு ஏற்றம்: ஆழ்வார் ஸம்பந்தம் இவளுக்கேற்றம் 'விட்டுசித்தர் தங்கள் தேவர்' என்று இவர்க்கு தேவராய் வடபெருங் கோயிலுடையான் நிறம் பெற்றான்; இவர் மகளாய் ஆண்டாள் நிறம் பெற்றாள்" என்பதே.

'பெரியாழ்வார் வயிற்றில் பிறப்பு உத்கர்ஷஹேது' என்பதால் உயர்குடியில் பிறப்பு பற்றி பெருமையுறுவதாகக் கொள்ளலாகாது. ஒரு உத்தம பாகவதவருடைய ஸம்பந்தம்—தகப்பனார் என்பதை விட ஆசார்யன் என்ற ஸம்பந்தம்—தனக்குள்ளது என்பது பற்றியே பெருமையுறுவதாகக் கொள்ளவேண்டும். மேலும், தான் கண்ணனைப் பலபடியாலும் நேரில் பல பாடல்களில் பற்றினளேயாயினும், அவற்றுக்காகக் கண்ணன் இறங்காவிடிலும், ஆழ்வார் ஸம்பந்தத்தையிட்டுத் தனக்கு அருள் புரிவன் என்ற திடமான நம்பிக்கை ஆண்டாளுக்கு உண்டு. ஆசார்ய ஸம்பந்தத்தினுல் தான் இவ்வாத்மவஸ்துவுக்குப் பேறு என்பதை நமக்கு உணர்த்தவே தன்னை ஆழ்வார் ஸம்பந்தத்தையிட்டே கூறிக் கொள்வதை உணர்க. தன்னுடைய திடமான அத்யவஸாயத்தை (நம்பிக்கையை) உறுத்தி வெளியிடும் பாசுரம் காண்க :

நல்ல வென் தோழி ! நாகணைமிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறுமானிடவர் நாம் செய்வதென் ?
வில்லிபுதுவை விட்டுசித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அதுகாண்டுமே.

(நாச்சியார் திருமொழி 10–10)

'அம்மான் ஆழிப்பிரான் அவன் எவ்விடத்தான் ? — யானார் ?' என்று நம்மாழ்வார் அநுஸந்திப்பது போல அவன் தன்னெப்பாரில்லாத அறப்பெரியவன். நாகணைமேல் துயிலும் பரம்பொருள். கூட, திருமகள்கேள்வனான செல்வன். நாமோ அல்ப மானிடர். அவனைப் பற்றினல் கொண்டாலும் கொள்வான்; உதறித் தள்ளினுலும் தள்ளுவான்; அவனை மடிபிடித்துக் கேட்க முடியாது. ஆனாலும் பதறவேண்டாம். ஆசாரியரான ஆழ்வார் இட்ட வழக்காயிருக்கும் வஸ்து அவன்' அவர் பரிவுடன் நீராடவாராய் பூச்சூடவாராய் என்று அழைத்து வருவிக்கும்படியாகத் தன்னை அமைத்துக் கொடுத்தவன். அவர் அழைத்து அவன் வரும்போது காணலாம். அவர் உறவையிட்டு நமக்கும் அருள் சுரப்பான் என்று

தோழியிடம் தன் நம்பிக்கையை வெளியிடுவதாக அமைந்துள்ளது இப்பாசுரம்.

திருவாய்மொழியில் நம்மாழ்வார் முதல் முதலாக பாகவதர் பெருமையை எடுத்துரைக்கும் பாசுரம் **பயிலும் சுடரொளி** என்னும் (3-7-1) பதிகம். இருபத்தாறு பதிகங்கள் எம்பெருமானைப் பற்றி பாடிய பிறகு பாகவதர்களைப் பற்றிப் பேசலுற்றார் ஆழ்வார். ஆண்டாளோ, தனது முதல் ப்ரபந்தமான திருப்பாவையில் முதல் பாசுரத்திலேயே தனக்குத் துணையாக தோழிகளை (பரமபாகவதோத்தமர்களை) 'செல்வச் சிறுமீர்காள்! நீராடப் போதுவீர்! போதுமினோ' என்று அழைத்து மேல் பாசுரங்களிலும் பாகவத ஸமாகமத்தையே பேசுவதாக அமைந்த பாடல்களையே பாடுகிறாள்.

கண்ணபிரானிடம் ஆண்டாளுக்கு ஆருதகாதல் வளர்ந்தது. தகப்பனாரான பட்டர்பிரான் உகந்தவஸ்து—ஏற்றும் பொருள் என்பது பற்றியே. முன்காட்டிய ''நல்ல வென்தோழி!'' பாசுரத்தில் கண்ணனைத் தன்னோடு உறவறுத்து பெரியாழ்வாரோட சேர்த்துப் பேசுவது காண்க. * த்ரிபுராதேவியார் என்னும் பக்தை, ''காடிச்சால் மூலையில் தேவதையாகிலும் எம்பெருமானார் பற்றினால் எங்களுக்கும் அதுவே அமையும்'' என்கிறாராம். காடிச்சால் மூலை என்பது பழைய (நீர்த்தம் சேர்ந்த) ப்ரஸாதத்தைப் பானையிலிட்டு வைக்கும் ஈசான்ய மூலை. இப்பெயரையே சொல்ல விரும்பாமல் காடிச்சால்மூலை என்றாள் எம்பெருமானார் சிஷ்யையான தேவியார். ''எம்பெருமானே பரம புருஷன்—உத்க்ருஷ்ட தெய்வம்; மற்ற க்ஷுத்ரதேவதைகளைப் பற்றிப்பயனில்லை'' என்பது சாஸ்த்ரம் ஆயினும், இவளுடைய அத்யவஸாயம், ''எந்த தேவதையாகிலும் ஆருக; ஆசார்யன் பற்றியதாகில் அதுவே நமக்கும் அமையும்'' என்பதே.

---

* கண்ணிநுண்சிறுத்தாம்பு வ்யாக்யான அவதாரிகையில் பெரியவாச்சான் பிள்ளை அருளிச் செய்துள்ளது.

இப்படி ஆசார்யரான பெரியாழ்வார் உகந்த பெருமான் என்று கண்ணனிடம் காதலை வளர்த்துக் கொண்ட ஆண்டாளுக்கு, ஆழ்வார் நெஞ்சில் வாழ்ந்து மகிழும் கண்ணன், அவர் உறவையிட்டு அருள் சுரந்து இவள் கார்யம் செய்து தலைக்கட்டத் தடையில்லை. பரமாசாரியரான ஆளவந்தாரும் தமது ஸ்தோத்ரரத்னத்தில், முதலில் ஆசார்ய வந்தனம் பண்ணி, நடுவில் எம்பெருமானைப் பலபடியாலும் துதித்து, "நதர்ம நிஷ்டோஸ்மி...அகிஞ்சந :, அநந்யகதி :, த்வத்பாத மூலம் சரணம் ப்ரபத்யே" என்று சரணம் பற்றினரேயாகிலும், முடிவில், "மத்வ்ருத்தம் அசிந்தயித்வா—பிதாமஹம் நாதமுநிம் விலோக்ய ப்ரஸீத" என்று தலைக்காட்டுகிறார். "அடியேன் பற்றியதைக் கணிசியாமல் பிதாமஹரும் பரமசார்யருமான நாதமுனிகள் ஸம்பந்தமுள்ளவன் என்பதையே நோக்கி அருள் புரியவேணும்" என்பது ப்ரார்த்தனை.

இனி எம்பெருமானாருடைய நிஷ்டையைப் பற்றி மேலும் சிறிது பேசுவோம். எம்பெருமானார் தம்மை ஆளவந்தாருடைய சிஷ்யராகவே எண்ணியிருந்தார். த்ரோணரிடம் ஏகலவ்யன் பயின்றாற்போல் இவரும் ஆளவந்தாரிடம் (நேரில் எதுவும் கேளாமல் தமது ஆசார்யபக்தி நிலையாயிருந்ததால் ஆசாரியன் அருளால், எல்லாம் கற்றறிந்தவர். இவருடைய க்ரந்தங்களின் முகப்பில் ஆசார்ய வந்தனம் யாமுனமுனியான ஆளவந்தாருக்கே செய்யப்படுகிறது. இவருக்குத் தமது நேர் ஆசார்யரான பெரிய நம்பியிடம் விசேஷப்ரதிபத்தி இருந்தது குருபரம்பரை வரலாறுகளில் காணலாம்.

சிஷ்யர்கள் சூழ எதிராசர் எழுந்தருளும்போது, பெரிய நம்பி பல சமயங்கள் தெண்டனிடுவதுண்டு. எதிராசரும் இதைக் கண்டும் காணுக்கண்ணிட்டுச் செல்வது வழக்கம். ஆசார்யன் தன்னை தெண்டனிடுவது தனக்கு ஸ்வரூபஹானி என்று விலக்குவதில்லை. இதைப் பற்றி சிஷ்யர்கள் தம்மைக் கேட்டபோது பெரிய நம்பியையே கேட்கும்படி நியமிக்க,

அவரும் "ஆளவந்தாரும் முதலிகளுமாகத் தோற்றுகையாலே தெண்டனிட்டேன்" என்றாராம். உடையவரும், தம் சிஷ்யர்களிடம் "அவர் நினைவிருந்தபடியைக் கண்டீர்கள். என் ஸ்வரூபத்தை நோக்கி விலக்கிலேன். சிஷ்யன் ஆசாரியனிட்ட வழக்காய் அவன் மனமுகப்பதையே நோக்கும் பாரதந்தர்யத்திலிருந்து நழுவினேனாவேன். ஆசாரியன் நினைவைப் பின்செல்வதொழிய சிஷ்யனுக்கு வேறு பணி இல்லை. ஆயினும் விநயம் பாவிப்போமாகில் அவரிட்ட தெண்டனை ஸ்வீகரித்தோமாவோம்; ஆகையாலேயே பேசாமலிருப்பது" என்று நல்லுரை நல்கினாராம். (தொடரும்)

---

பிழை திருத்தம்: சென்ற இதழில் பக்கம் 34 கடைசியில், "உன்னையொழிய ஒரு தெய்வம் மற்றறியா" என்றும், கடைசி பாராவில் எம்பெருமான் என்பதை எம்பெருமானார் என்றும் திருத்திக் கொள்ளவும்.

